# 16.09.2011 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்றப்பொருள்

மன்றப்பொருள்: 1

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் திரு.ஆர்.மாணிக்கம், திரு.கே.சுப்பிரமணியன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளையில்) தொடர்ந்துள்ள அப்பீல் வழக்கு எண். W.A.S.R.No.6337/2011 & W.A.S.R.No.6338/2011 க்கு இந்நகராட்சியின் சார்பாக வழக்காட திரு. கே.மகேந்திரன், சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி இரண்டு வழக்குகளுக்கு வழக்காடல் கட்டணம் ரூ.15,000/– (ரூ.7500 X 2) வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1 மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்: 2

தென்காசி நகராட்சி பொது நிதி 2008–09ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 55 நாள். 12.05.2008ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 29.09.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 20, சிந்தாமணியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2.50 | 1) ஏ.முகம்மது நிஜாம்<br>2) எஸ். அருணாசலம் | 4.99 % கூடுதல்<br>8.49 % அதிக கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்த் தொகையினை விட 4.99 % கூடுதலாக பணியினை மேற்கொள்ள சம்மதக் கடிதம் கொடுத்துள்ள திரு. ஏ.முகம்மது நிஜாம், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள்: 3

தென்காசி நகராட்சி பொது நிதி 2011–12ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 121 நாள். 30.06.2011ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 02.09.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 20, சிந்தாமணியில் உள்ள நவீன கழிப்பிடத்தின் முன்பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 0.30 | 1) ஏ.முகம்மது நிஜாம்<br>2) எஸ். அருணாசலம் | 4.93 % கூடுதல்<br>5.81 % அதிக கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்த் தொகையினை விட 4.93 % கூடுதலாக கொடுத்துள்ள திரு. ஏ.முகம்மது நிஜாம், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

மன்றப்பொருள்: 4

தென்காசி நகராட்சி பொது நிதி 2011–12ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 8 நாள். 31.01.2011ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 02.09.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 1 ஜமாலியா நகரில் தார்தளம் அமைத்தல் | 3.10 | 1) ஏ.முகம்மது நிஜாம்<br>2) எஸ். அருணாசலம் | 0.09 % குறைவு<br>1.94 % கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்த் தொகையினை விட 0.99 % குறைவாக கொடுத்துள்ள திரு. ஏ.முகம்மது நிஜாம், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

<u>மன்றப்பொருள்: 5</u>

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட களக்கோடித் தெருவில் உள்ள அப்துல்கலாம் நகர் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி நகரில் உள்ள (கிழமேல் 448 அடி தென்வடல் 23 அடி மற்றும் கிழ மேல் 75, தென்வடல் 15, தென்வடல் 25 கிழமேல் 15) வீடுகளுக்கு குடிநீர் பகிர்மானக் குழாய் நம் நகராட்சி மூலம் அமைக்கப்படாத காரணத்தினால் மேற்படி நகரில் வசிக்கும் பொதுமக்கள் தங்களின் சொந்த செலவில் 17.00 மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்துக் கொள்ள அனுமதி கேட்டுள்ளார்கள். மேற்படி பகிர்மானக் குழாய் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதிக்கலாம் |

<u>மன்றப்பொருள்: 6</u>

இந்நகராட்சி தணிக்கை கணக்கு 2008—09ம் ஆண்டிற்கான குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி தணிக்கை அறிக்கையினை கணணியில் டைப் செய்தும் மற்றும் பைண்டிங செய்தும் 5 எண்ணம் தயார் செய்து தர உத்தேச செலவினம் ரூ.5,000/—க்கும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 16.08.2011ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | ஐ.செய்யது அலி அப்பாஸ்,ஐ.கே.ஏ & டிடிபி பிரிண்டர்ஸ்,<br>29, கீழஆவணி மூலவீதி, தென்காசி | 4,900 |
| 2 | விக்னேஷ் பிரிண்டர்ஸ் ஆப்செட்,<br>114, பொன்னிப்பாறைத் தெரு, தென்காசி | 5,000 |

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | உத்தேச செலவினத் தொகை ரூ. 5,000/—ஐ மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்ட குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம். |

மன்றப்பொருள்: 7

இந்நகராட்சி தணிக்கை கணக்கு 2008–09ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி தணிக்கை அறிக்கையினை கணணியில் டைப் செய்தும் மற்றும் பைண்டிங செய்தும் 5 எண்ணம் தயார் செய்து தர உத்தேச செலவினம் ரூ.5,000/–க்கும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 16.08.2011ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | ஐ.செய்யது அலி அப்பாஸ்,ஐ.கே.ஏ & டிடிபி பிரிண்டர்ஸ், 29, கீழஆவணி மூலவீதி, தென்காசி | 4,900 |
| 2 | விக்னேஷ் பிரிண்டர்ஸ் ஆப்செட், 114, பொன்னிப்பாறைத் தெரு, தென்காசி | 5,000 |

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | உத்தேச செலவினத் தொகை ரூ. 5,000/–ஐ மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்ட குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம். |

மன்றப்பொருள்: 8

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட தெற்குமாசி, மேலமாசி மற்றும் வடக்குமாசி வீதிகளில் சிமெண்ட் தளம் அமைக்கம் பணி தாமதம் செய்வதால் மேற்படி பணியினை செய்யவும் திரு.எஸ். செல்வராஜ் ஒப்பந்தக்காரருக்கு இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.ஏ.பி. முகம்மது ரபி அவர்கள் மூலம் அறிவிப்பு அனுப்பி வைத்தமைக்கு ரூ.400/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதிக்கலாம் |

<u>மன்றப்பொருள்: 9</u>

தென்காசி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 பாவடி தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11ன் கீழ் தார்சாலை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை எண். அ8/1277/10 நாள். 11.06.2010ன்படி மதிப்பீடு 1.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.280 நாள். 21.10.2010ன்படி ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி பணி ஒப்பந்தக்காரர் எஸ். சுடலைமுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டது. பணி முடிவின்போது மதிப்பீட்டு தொகையினை விட கூடுதலாக ரூ.22,483/– (இருபத்திரெண்டாயிரத்து நானூற்று எண்பத்தி மூன்று மட்டும்) செலவு ஏற்பட்டுள்ளது. எனவே மதிப்பீடு திருத்தப்பட்டு திருத்திய மதிப்பீடாக ரூ.1,25,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | திருத்திய மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | இச் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். |

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.

## தென்காசி நகராட்சி

## 16.09.2011 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்

| மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | 178 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 179 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 180 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 181 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 182 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 183 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 184 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 185 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 186 | அனுமதிக்கப்பட்டது |

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.